உலகு 1 ஜூன் 2007 பணிமடல் 4

சீடு டிரஸ்ட் குழந்தைகள் வழங்கும் தனிச்சுற்று மாத இதழ்

# புதுயுகம்

மலர்கின்ற உலகை நற்பணிகளால் காப்போம்

நன்கொடை விலை ரூ. 2/-

இந்தியப் பண்பாடு பாடத்தில்
மாநிலத்தில் 3-வது இடம்பெற்ற
மதுரை மாணவர் விக்கி

நீ சிறிய விதை தான்
ஆனால்
உனக்குள் ஒளிந்து
கொண்டிருக்கிறது
பிரமாண்டமான மரம்
உன் வேர்களுக்கு
பூமியும் எல்லை இல்லை
உன் கிளைகளுக்கு வானமும் எல்லை இல்லை
உன் வேர்கள் மர்மஇருள்களின் ஆழங்களில்
நீர் அருந்தட்டும்
உன் கிளைகள் நட்சத்திரங்களை நோக்கி
கை விரிக்கட்டும்

– கவிக்கோ அப்துல் ரகுமான்

புதுயுகம் தனிச்சுற்று சிற்றிதழ் – சீடு டிரஸ்ட் வழிகாட்டலால் 15 வயது முதல் 17 வயது நிரம்பிய குழந்தைகளால் வளமைக் கல்வி நோக்கில் நடத்தப்படுகின்றது.

# என் பேரும் சாதிச்சவங்க வரிசையில் சேரனும்...

-செ.விக்கி

1037 மதிப்பெண். இந்திய கலாச்சாரம் பாடத்தில் மூன்றாமிடம். கார்த்திக் பாரதி அண்ணனின் வரவேற்பு. நிறைய செய்தித்தாள்களில் புகைப்படம். சீடு புதுயுகம் இதழில் பேட்டி-ம் சந்தோஷமா இருக்கு. இதெல்லாம் எனக்கு புதிய பாதையை தந்திருக்கிறது. முக்கியமாக கல்வி குறித்த விழிப்புணர்வை வழங்கியிருக்கிறது. நான் படித்த பாடங்கள் வரலாறு, புவியியல், இந்திய கலாச்சாரம், பொருளியல். இதை எடுத்து படிக்கும்போது ஏகப்பட்ட கேலி, கிண்டல். இந்த குரூப்பா, நல்லா இருக்காதே நான் இதெல்லாம் கண்டுக்கல. கஷ்டப்பட்டு படிச்சேன். பாடங்களை விரும்பி படிச்சேன். இந்த குரூப்ல படிச்சு சாதிச்சவங்க நிறைய பேர். என் பேரையும் சாதிச்சவங்க வரிசையில் சேர்க்கனும். எங்க, என்ன படிக்கிறோமுனு முக்கியமில்லை. எப்படி படிக்கிறோம் என்பது தான் முக்கியம்

+2 கல்வி எனக்கு என்னவோ மறக்க முடியாத அனுபவம். செய்யாத சேட்டைகள் இல்லை. பண்ணாத குறும்புகள் இல்லை. படத்துக்கு போறது. கல்யாணங்களுக்கு போறது. அரட்டை அடிப்பது. திருவிழாக்களுக்கு போறது. **Projects**களுக்கான **Educational Trips, Seminars,** நிறைய **Advise** கேட்குறது. ஊழ குசும்பு பண்ணி தப்பிக்கிறது. எப்பவுமே கூட்டமா கும்மாளம் அடிக்கிறது. கொடை ஞாயிறு நாடகத்திற்கான ஒத்திகைகள் என்று எல்லாமே **School Life** ஒரு பெஸ்ட் ஆட்டோகிராப்தான். ஜாலியான பிரெண்ட்ஸ், அற்புதமான டீச்சர்ஸ் ரெண்டும் எனக்கு கிடைச்ச வரப்பிரசாதம். உண்மையில் தியாகராஜா பள்ளி எனக்கான களமா இருந்துச்சு. என் தியாகராஜா பள்ளி லைஃப்-னா **Enjoyment + Good Education**னு சொல்லலாம். எனக்கு பரீட்சைகள் வரப்பெல்லாம் பல பிரச்சனைகள் வரும். சீக்கிரமா எந்திரிச்சு படிச்சு பழக்கமில்லை. நைட் முழிச்சுகிட்டே தூங்குற பழக்கம் உண்டு. ஒன்று மட்டும் நிச்சயம். பிரச்சனைகள் தான் வாழ்க்கை. எனக்கு தினசரி அது நடக்கும். இருந்தாலும் வாழ்க்கையை ரொம்ப நல்லாவே **Enjoy** பண்ணுவேன். விஜய் படம் ஓபனிங் ஷோ. விஜய்க்கு பேனர். சேகுவரா **T.Shirt** போட்டு அலையுறது. ஊர் திருவிழாவிற்கு முன் குத்தாட்டம் போடற செம அலப்பறையான ஆளு நான். இவ்வளவுக்கும் மத்தியில படிக்கிற பேலன்ஸ் மைண்ட் என்னிட்ட இருந்துச்சு. தேர்வை சந்திக்க படிக்கனுமில்லே. பிரச்சனைகள் வாறப்பெல்லாம் ப்ரண்ட்ஸ் வீடுகள், பார்க் என்று எஸ்கேப் ஆகி படிப்பேன். கஷ்டப்பட்டதுக்கு ஓரளவுக்கு பலன் வந்திருக்கு

இன்னும் மார்க் வந்திருக்கும். பல பிரச்சனைகள். பரவாயில்லை. இன்னும் கல்வியில் சாதிப்பேன். காத்திருங்க என்னை வாழ்த்த. நன்றி

ஆக்கம்: C.பிரேம்குமார்

---



*விக்கிக்கு சேகுவேரா போல பெரிய சமூகப்புரட்சி செய்யனுமுன்னு ஆசை. IPS ஆவது அவருடைய கனவு. கனவுகள் நனவுகளாக நாம் வாழ்த்துவோம். நாம் அறிந்தவரை கடந்த 15 ஆண்டுகளில் கரும்பாலையில் மாநிலத்தில் சிறப்பிடம் பெற்றவர் இவரே என அறிகிறோம்.*

*வாழ்க! வளமைகள் பெறுக!!*

*-சீடு அறக்கட்டளை*

# நமக்கான சூழலை நாமே உருவாக்குவோம்!

[illegible]

கரும்பாலை, எஸ்.எம்.நகர், தத்தனேரி, இந்திரா நகர், மானகிரி, P.T.காலனி, சம்பகுடி போன்ற பல பகுதிகள் அன்றாட வாழ்வினை சமாளிக்க பிரயத்தனப்படும் குடும்பங்கள் நிறைந்திருக்கும் பகுதிகளாகும். இப்பகுதியில் அன்றாட கூலித் தொழிலாளர்களும், வீட்டு வேலைக்கு செல்லும் பெண்களும் நிறைந்திருக்கின்றனர். இப்பகுதிகளில் முதல் முறையாய் பள்ளி இறுதிக் கல்வியை தொட்டவர்கள் அதிகம்பேர். கல்விசூழல், பொருளாதார சூழல்களினால் கல்வியை இடையில் விட்டவர்கள் மிக அதிகம் பேர். வறுமை என்ற காரணம் விவாதிக்கபட, தீர்க்கபட வேண்டிய ஒன்றாக உள்ளது. வறுமையையும், சமூக, குடும்ப சூழல்களையும் மீறி சாதனைகள் செய்ய இயலுமா? இயலும் என்பதற்கு பல உதாரணங்கள் உண்டு.

விதி ஒரு கதவை மூடும்போது நம்பிக்கை இன்னொரு கதவைத் திறக்கிறது. நம்பிக்கையுடன் வறுமையை விரட்டிய சாதனையாளர்கள் கதைகளை வாசிப்போம்.

ஆபிரகாம் லிங்கன் ஒரு விறகு வெட்டியின் மகன். வறுமையால் கல்வி மறுக்கப்பட்டவர். படகோட்டியாக பிழைப்பை ஓட்டியவர். மளிகை கடை நடத்தியவர். நில அளவையராக பணியாற்றியவர். வறுமையை எதிர்த்தே உழைத்தார். ஒருநாள் அமெரிக்க ஜனாதிபதியானார்.

இராமேஸ்வரத்தில் பிறந்தவர் படிக்கும்போதே செய்தித்தாள் விற்றவர். தனக்காக தன் படிப்பை விட்ட அக்காவின் தியாகத்தை உணர்ந்து படித்து, முன்னேறியவர் முதல் குடிமகன் ஏ.பி.ஜே. அப்துல்கலாம்.



தாழ்த்தப்பட்ட குடும்பத்தில் பிறந்து வறுமையில் வாழ்ந்து, இந்திய அரசியல் சட்டம் படைத்தவர் அண்ணல் அம்பேத்கார்.



இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் படேல் ஏழை விவசாயின் மகனாய்ப் பிறந்து வலிமை மிக்க இந்தியாவை உருவாக்கவில்லையா. செருப்பு தைப்பவரின் மகனான ஸ்டாலின் ரஷ்யாவின் அதிபராகி சரித்திரம் படைக்கவில்லையா?

பெட்ரோல் பங்கில் உதவியாளர் வேலை. சிறுசிறு வேடங்களில் நடிகர் பின்பு சினிமாவில் தனக்கென தனி இடம் பிடித்தவர் மதுரை சினிமாகாரர் பாரதிராஜா.

தான் பிறந்தபோது மருத்துவமனை செலவுக்கு கூட பணம் இல்லாத சமையல் காரரின் மகன் ஜாக்கிசான். ஏழு வயதிலே நாடக கம்பெனியில் நடித்தார். உழைத்தார். இன்று ஆசியாவில் அதிக சம்பளம் வாங்கும் நடிகராக ஜாக்கிசான் விளங்குகிறார்.

தமிழக விளையாட்டு வீராங்கனை அமுதாவின் தந்தை தினகூலி. தாய் மெரினாவில் கரும்புசாறு விற்பவர். சீனா டியான்ஜின் ஆசிய போட்டியில் தங்கம் வென்றார். வறுமையின் விளிம்புக்கு தள்ளபட்டு, சராசரி உணவு கூட உண்ண முடியாத நிலையிலும், வறுமையை விரட்டி வாழ்வை உயர்த்திக் கொண்ட வீராங்கனை அமுதாவின் வாழ்வு நமக்கு நல்ல முன்மாதிரி.

திருச்சி மெய்யம்பட்டி கிராமத்து கிருஷ்ணமூர்த்தி ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தவர். IAS ஆவது இவரது கனவு. ஆசிரியர் பயிற்சி முடித்து கல்லூரி செல்ல பணமில்லை. அஞ்சல் வழியில் சமூகவியல் பட்டம் படித்த இவர் கடைசியில் IAS தேர்வில் வென்றார்.

இதோ நம் தத்தனேரி பகுதி முத்து மாணிக்கம் திரு.வி.க.பள்ளி மாணவர் இவரை பற்றி கூறும் நண்பர்கள் முத்துமாணிக்கம் ஒருநாள்கூட 3 வேளை சாப்பாடு கூட சாப்பிட்டது இல்லை என கூறுகிறார்கள். சொல்லுங்கள் (வறுமை வளமாகும் அல்லவா) விடுமுறையில் வேலைக்கு செல்லும் மாணவர் +2 தேர்வில் சிறப்புத் தமிழ் பாடத்தில் மாநிலத்தில் மூன்றாம் இடம் பெற்றுள்ளார்.

மதுரை மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு அரசுத்தேர்வில் முதல் இரண்டு இடம் பிடித்தவர்களில் அருண்குமார் சலூன் கடைக்காரரின் மகன். செந்தில்வேல் உரக் கடை பணியாளரின் மகன். நம் பகுதிகளைச் சேர்ந்த பலருக்கு வறுமை மைனஸ்தான். அதையே பிளஸ் ஆக்கி வாழ்வில் முன்னேறுவோம். சூழல்களை குறை சொல்வதை நிறுத்துவோம். சிறந்த சூழல்களை நாமே உருவாக்குவோம். வாழும் வரை போராடுவோம். வழிகள் உண்டு என்றே பாடிடுவோம். வறுமையின் தடைகளை தாண்டிடுவோம். தடம்பதித்திடுவோம்.

அன்புடன்
சிறு நற்பணிகளில்
A.S.கார்த்திக் பாரதி

## விளையாடி மகிழ்க....

## வானம், பூமி, நீர்....

விளையாட்டில் பங்கெடுப்பவர்கள் எல்லாரும் வட்டமாக உட்கார்ந்து கொள்ள வேண்டும். ஒருவர் மட்டும் அந்த வட்டத்தின் மத்தியில் நின்று கொள்வார். நிற்பவர் திடீரென்று உட்கார்ந்திருப்பவர் யாரையாவது சுட்டிக்காட்டி, வானம் என்றோ பூமி என்றோ நீர் என்றோ கத்துவார். உடனே சுட்டிக் காட்டப்பட்டவர் அது தொடர்பான உயிரினத்தின் பெயரைச் சொல்ல வேண்டும். உதாரணத்துக்கு வானம் என்று கத்தினால் கிளி என்று சொல்ல வேண்டும். நீர் என்று கத்தினால் நண்டு என்று சொல்லவேண்டும். பூமி என்று கத்தினால் நரி என்று சொல்ல வேண்டும். யோசிக்காமல் உடனடியாக பதில் சொல்ல வேண்டும். நடுவில் உள்ளவர் நெருப்பு என்று கத்தினால் ஆட்டக்காரர்கள் அமைதியாக இருக்க வேண்டும். மாற்றிச் சொல்வதோ ஏற்கனவே வேறு யாரும் சொன்னதைத் திருப்பி சொல்வதோ கூடாது. தவறு செய்யும் விளையாட்டுக்காரர் எழுந்து நடுவில் நின்று கொள்வார். நடுவில் நின்றவர் வட்டத்தில் இணைந்து கொள்ள விளையாட்டு தொடரும்.



-ரா.பாஸ்கர் ராஜா

## கதை.... விடுகதையோ...

1) ஐந்து வீட்டுக்கு ஒரு முத்தம் அது என்ன?

2) இரண்டு வீட்டுக்கு ஒரு தூண்

3) வெள்ள கல்லுல கருப்பு தோசை

4) கிணற்றை சுற்றி வெள்ளைக்கல்

5) கருப்புப் பொட்டிக்குள் வெள்ளை முத்து

6) கருப்புப் பொட்டிக்குள் வெள்ளை முத்து

7) நாம் செல்லும் இடமெல்லாம் வருவான். நமக்கு பல உதவிகள் செய்வான். அவனை வீட்டுக்குள் சேர்க்க மாட்டோம்

8) ஓடோடி வருவான். உருண்டோடி வருவான். பள்ளத்த கண்டால் பதுங்கி நிற்பான்

9) அள்ள முடியும். கிள்ள முடியாது


10) பிச்சிப்பூ சிதறிக் கிடக்குது. அள்ள நாதியில்லை ராஜா மகள் கோபித்துக் கொண்டு போறா அழைக்க நாதியில்லை.

**விடைகள்**

1) கை
2) மூக்கு
3) கண்
4) பல்
5) உளுந்து
6) கொடிக்கா விதை
7) செருப்பு
8) தண்ணீர்
9) தண்ணீர்
10) நட்சத்திரம், மேகம்

சொன்னது :வாண்டுகள் அரங்க குழந்தைகள்
எழுதியது : முத்துப்பாண்டி


# வாண்டுகள் கைவண்ணம்



மூகாம்பிகா



சிவா




கௌதம்



பா.கார்த்தி



ஸ்ரீநாத்



கார்த்தி (5th)


"சாதனையின் விதை
'என்னால் முடியும்' என்கிற
நம்பிக்கையில் தான் இருக்கிறது
அவ்விதை நம்பிக்கை எனும்
தண்ணீரில்தான் துளிர் விடுகிறது."

- ஏ.சங்கீதா

## துணுக்கு...

- பச்சோந்தியின் நாக்கு அதன் உடலைப் போன்று இரண்டு மடங்கு பெரியதாகும்.
- பூனைகள் தங்களது தாடைகளை பக்கவாட்டில் அசைக்க முடியாது.
- 500 கிலோ எடையுள்ள ஒரு குதிரை ஒரு ஆண்டில் தன்னைப் போன்று 7 மடங்கு எடையுள்ள உணவினை தின்று தீர்த்து விடுகிறது.
- முழுவளர்ச்சி பெற்ற சிங்கம் கர்ஜித்தால் அது 5 கிலோ மீட்டர் தூரத்திற்குக்கப்பால் கேட்கும்.
- வேகமாக பறக்கும் பூச்சிகளில் தட்டான் பூச்சியும் ஒன்று. இது மணிக்கு அதிகப்பட்சமாக 96 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கும்.
- ஒரு மரங்கொத்தி பறவை ஒரு விநாடியில் 20 தடவை மரத்தை கொத்தும்.
- ஒரு பூனையால் 100 விதமான ஒலிகளை எழுப்ப முடியும். ஆனால் , நாயால் 10-வித ஒலிகளை மட்டுமே எழுப்ப இயலும்.

-7-ஆம் வகுப்பு குழந்தைகள்




-ஆஷா மாலு

## வாத்து முட்டை மேல் உட்கார்ந்த அல்

அல், அல், என்று கத்தினார் நான்சி எலியட், பதில வரவில்லை. மீண்டும் கத்தினார்.பதில் வரவில்லை. குழந்தை எங்கே போய்விட்டான் தெரிய வில்லையே!



இதற்குள் அல்லின் தந்தை சாமுவேல் எடிசன் வந்தார். "அல்லைக் காணவில்லை" என்றார். அவரது மனைவி நான்சி எலியட்.

"சரி, நான் போய் பார்த்து விட்டு வருகிறேன்" என்று வெளியே சென்றார்.சாமுவேல். சிறது நேரத்தில் 'அல் ஐ' அழைத்துக கொண்டு வந்தார். இவன் எங்கே இருந்தான் தெரியுமா? நமது தொழுவத்தில் வைக்கோலைப் பரப்பி அதில் வாத்து முட்டைகளை வைத்து அவற்றின் மேல் உட்கார்ந்து கொண்டிருந்தான் என்றார் சாமுவேல்.

ஏன் அப்படி இருந்தானாம் ? என்று கேட்டான் வில்லியம். அடை காக்கிறானாம். காலையில் வாத்து முட்டைகளை அடைகாப்பதை பார்த்தானாம். டேன்னி சொன்னதை அவன் நம்பவில்லை. தானே வாத்து முட்டைபோல் அமர்ந்து பார்க்க முடிவு செய்து விட்டான். குஞ்சு பொறிக்கும் வரை வரமாட்டேன் என்கிறான்.

அம்மா ஓடிச் சென்று அவனைக் கட்டிக் கொண்டார். என் மகன் பெரிய விஞ்ஞானியாக வருவான் என்று அவனை தூக்கிக் கொஞ்சினார்.

- C.அருண்குமார்

**பிற்காலத்தில அம்மாவின் கணிப்புப்படி தாமஸ் ஆல்வா எடிசன் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளை நிகழ்த்தினார்.**

I. 'மா' வில் தொடங்கும் வார்த்தைகளை கண்டுபிடி.

மா

1. தனது ஆடல் திறமையால் கோவலனைக் கவர்ந்தவள்
2. அம்மாவின் தம்பி
3. மிகப்பெரிய வீடு
4. தமிழ்நாடு, கேரளா போன்றவை
5. மன்மதனை இப்படியும் அழைப்பதுண்டு.

II. 'போ'வில் தொடங்கும் வார்த்தைகளை கண்டுபிடி :

1. மத்தியப் பிரதேசத்தின் தலைநகர்
2. அசல் அல்ல
3. புத்தருக்கு இதன் கீழ்தான் ஞானம் கிடைத்தது.
4. ஜமக்காளத்தின் நண்பன்
5. காந்தி பிறந்த ஊர்

போ

III. 'மே'யில் தொடங்கும் வார்த்தைகளை கண்டுபிடிக்க

மே

1. தமிழகத்தின் இந்த ஊரில் அணைக்கட்டு உண்டு.
2. இந்த மாநிலத்தின் தலைநகர் ஷில்லாங்
3. ஏசுநாதரின் தாய்
4. பள்ளம் என்பதன் எதிர்ச்சொல்
5. காளிதாசர் எழுதிய நூல்

IV. 'க'வில் தொடங்கும் வார்த்தைகளைக் கண்டுபிடி.

1. தமிழில் இராமாயணத்தை எழுதியவர்
2. இது நேரம் காட்டும்
3. பரிவு
4. அகலிகை, சாபத்தால் இப்படி ஆனாள்
5. கல்லணை கட்டிய மன்னன்

க

விடைகள் 7-ஆம் பக்கம்

ஆசிரியர் குழு.

# குழப்பல் கணக்குகள்

1) ஆதிக்கு இப்போது நாற்பது வயது
மகள் மணிக்கு வயது பதின்மூன்று
எத்தனை வருடங்களுக்கு முன்னால் மணியின்
அப்பா சுந்தரத்தின் வயது நான்கு மடங்காக
இருந்திருக்கும்?

2) ஓர் இடத்தில் சில கோழிகளும் சில குதிரைகளும்
இருக்கின்றன. எண்ணிப் பார்க்கையில்
மொத்தம் 43 தலைகளும் 120 கால்களும்
இருந்தன. என்றால், அதில் கோழிகள்
எத்தனை, குதிரைகள் எத்தனை?

3) சேகரன் இரண்டு வங்கிக் கணக்குகள்
வைத்திருந்தான். இரண்டு வங்கிக் கணக்குகளின்
எண்களும் நான்கு இலக்கம், முதலாம்
வங்கிக் கணக்கு எண், இரண்டாம் வங்கிக்
கணக்கு எண்ணைப் போல் நான்கு மடங்கு
முதலாம் எண்ணை ரிவர்ஸில் எழுதினால்
இரண்டாம் எண் கிடைக்கும். அந்த இரண்டு
எண்கள் எவை?

4) ஓர் எண்ணை ரிவர்ஸில் எழுதினால்
அதன் மதிப்பு ஐந்தில் ஒரு பங்கு
அதிகரிக்கும். அந்த எண் எது?

5) அம்மாவின் வயதை ரிவர்ஸில் எழுதினால்
அது மகனின் வயது ஆகும்.
ஒரு வருடம் முன்பு, மகனின் வயதைப்
போல அம்மாவின் வயது இரண்டு
மடங்காக இருந்தது. இப்போது
அம்மா, மகனின் வயதுகள் என்ன?

P.சரவணக்குமார்

விடைகள் : 7-ஆம் பக்கம்

# சீடு குடும்பம்

நல்ல குடும்பம்
ஒரு பல்கலைக் கழகம்
நாளும் மகிழ்ச்சிப் பூக்கள்
பூத்துக் குலுங்கும் நந்தவனம்.
ஒலிக்கையில் கானங்கள்
இசைந்திடும் பூங்குயில்கள்
எண்ணங்கள்
நிறைவேறும் ஆசைகளால்
நிறைந்திடும் ஆனந்தம்.
நல்ல குடும்பம்
எங்கள் சீடு குடும்பம்



C.கற்பகஜோதி

## Bats - Myths and Realities

*Many people think that bats are blind and dangerous. They attack humans, stick to the body and once they stick it is difficult to remove them. While flying they frequently entangle with women's hair. They consume food through the mouth and defecate also through the mouth and they spread diseases. All these statements are not true.*

*Bats are beneficial animals. The insectiverous bats are the only major predators of night-flying insects and thus control the agricultural pests. The fruit bats disperse seeds. Their activities are vital to rain forests and to the world's most economically important plants. the nectarivorous bats pollinate many flowers of bananas, mangoes, guavas, avocadas, dates, figs, etc., Some flowers open or produce nector only at night relying on bats to be studied in detail and for the public to be informed of the myths and realities about bats".*

**C. Karpagajothi**

# ஒவ்வொன்னும் ஒரு லட்சம்

(ராமசாமியும் ,குப்புசாமியும் எதிர் எதிரே சந்தித்துக் கொள்கிறார்கள்)



ராம : ஏய் ! இங்கே வா ! நீ குப்புசாமி தானே !

குப்பு : ஆமா !

ராம : என்ன ! பார்த்தும் பார்க்காதது மாதிரிப் போற அவ்வளவு மண்டைக் கனமா உனக்கு ஒன்னைப் பத்தி எனக்கு நல்லாத் தெரியும். ஒனக்கு மூனு பொம்பளைப் பிள்ளைக தானே!

குப்பு : ஆமா, அதுக்கென்ன !

ராம : அதுக்கென்னவா ! பொம்பளைப் பிள்ளைகளை வச்சிகிட்டு நீயே இப்படி மண்டைக் கனத்தோடு திரிஞ்சா நான் எப்படி இருக்கனும் தெரியுமா? எனக்கு மூன்று ஆம்பளைப் பசங்க !

குப்பு : அதுக்கென்ன !

ராம : அதுக்கென்னவா ! யோவ் ! ஆம்பளைப் பிள்ளைன்னா ஒவ்வொண்ணும் ஒரு லட்சம்னா (கத்துகிறார்) ஒவ்வொன்றும் ஒரு லட்சம் ! ஒவ்வொண்ணும் ஒரு லட்சம் ! ஒவ்வொண்ணும் ஒரு லட்சம் !

( ஒருவன் மூச்சிரைக்க ஓடி வந்து ராமசாமியிடம் கூறுகிறான்)

வந்தவன் : அண்ணே ! அண்ணே ! ஒங்க மூத்த பையன் ... ஒங்க மூத்த பையன் சீட்டுக் கம்பெனியில வேல பாத்தானில...

ராம : ஆமா ! என்னடா ! என்ன ஆச்சு?

வந்தவன்: சீட்டுக் கம்பெனியில இருந்த 1 லட்ச ரூபாயத் தூக்கிட்டு ஓடிப் போயிட்டான். போலீஸ் தேடுதாம்.

ராம : அடப்பாவி ! இதச் சொல்லவா ஓடி வந்த? அதையும் இந்த நேரம் பாத்துச் சொல்றியே ! போடா ! போய்த் தொலைடா (குப்புசாமியைப் பார்த்துச் சமாளித்து ) அது ஒண்ணுமில்ல ! அது ஒண்ணுமில்லே ! நான் என்ன சொல்லிக்கிட்டிருந்தேன். ஆ ! ஞாபகம் வருது. ஆம்பளைப் பிள்ளைன்னா ஒவ்வொண்ணும் ஒரு லட்சம் குப்புசாமி! ஒவ்வொண்ணும்...

(மீண்டும் ஒருவன் மூச்சிரைக்க ஓடி வந்து ராமசாமியிடம் திக்கித் திணறிக் கூறுகிறான்)

வந்தவன்: அண்ணே ! அண்ணே ! ஆபீஸ்லே கேஷியரா வேல பாத்தானில ஒங்க ரெண்டாவது பையன் . அவன் 1 லட்ச ரூபாய்க்கு செக்கில முதலாளி மாதிரி கள்ளக் கையெழுத்து போட்டு மாட்டிக்கிட்டான். போலீஸ் பிடிச்சு வச்சிருக்கு.

ராம : (முகம் கறுக்கிறது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு) போடா ! போய்த் தொலைடா ! முக்கியமான விஷயம் பேசிக்கிட்டிருக்கப்ப இவன்வேற குறுக்க வந்துட்டான். அதாவது, குப்புச்சாமி ... நான் என்ன சொல்ல வந்தேன்னா? ஆம்பளைப் பையன்னா... ஒவ்வொண்ணும்

(அப்போது மற்றொருவன் ஓடி வந்து ராமசாமியிடம் )



வந்தவன்: அண்ணே ! அண்ணே ! ஒங்க கடைசிப் பையன்...

ராம : (பதறி) என்னடா? ஒரு லட்சமா ?

வந்தவன்: அடடே எப்படி கண்டுபிடிச்சீங்கண்ணே !

ராம : (அவன் முதுகில் அடித்து) நீங்க என்னைக்குடா நல்ல செய்தியக் கொண்டு வந்தீங்க ? பாவிகளா

(தலையில் துண்டைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து விடுகிறார் )

அய்யய்யோ! ஒவ்வொருத்தனும் தலையிலே கல்லைத் தூக்கிப் போட்டுட்டுப் போயிட்டானுங்களே மகனே! நான் என்ன செய்வேன்? நெஞ்சு வலிக்குதே

குப்பு : ராமசாமி! எந்திரி! எந்திரிய்யா! கவலப்படாதே எம்மூத்த பொண்ணு ஐ.பி.எஸ். படிச்சு போலீஸ் அதிகாரியா இருக்கு. ரெண்டாவது பொண்ணு வக்கீலுக்குப் படிச்சிருக்கு. அவுங்களைப் போய்ப் பார்ப்போம். ஒங்க பிள்ளைகளைக் காப்பாத்துறதுக்கு வழியிருக்கான்னு கேட்போம்.

ராம : அவனுகளைக் காப்பாத்தி என்ன செய்ய? எனக்கு நெஞ்சு வலிக்குதே

குப்பு : கவலப்படாதே! என் கடைசிப் பொண்ணு டாக்டராயிருக்கு. அதுகிட்டே காட்டுவோம்.

ராம : (ஆச்சர்யத்தோடு) ஆ! அப்படியா? நீ குடுத்து வச்சவன். எனக்கும் பொம்பளைப் பிள்ளைக இல்லாமப் போச்சே!

குப்பு : அட கிறுக்கா ! ஆம்பளைப் பிள்ளை பொம்பளைப் பிள்ளைன்னு ஏன் வித்தியாசப்படுத்திப் பாக்கற ரெண்டும் நமக்கு ரெண்டு கண்ணு. ஆணும் பெண்ணும் சமம். சொல்லு சத்தமா!

ராம : ஆணும் பெண்ணும் சமம்!



குப்பு : வா போவோம்!

(போகிறார்கள்)

நன்றி அறிவொளி ஆசிரியர் கையேடு. எம்.தங்கவேலசுமி

## ௫-ஆம் பக்க விடைகள் :

I.
1) மாதுளி
2) மாமன்
3) மாளிகை
4) மாநிலங்கள்
5) மாறன்

II.
1) போபால்
2) போல்
3) போதிமரம்
4) போர்வை
5) போர்பந்தர்


III.
1) மேட்டூர்
2) மேகாலயா
3) மேரி
4) மேடு
5) மேகதூதம்

Iv.
1) கம்பர்
2) கடிகாரம்
3) கருணை
4) கல்
5) கரிகாலன்

## ௬-ஆம் பக்க விடைகள் :

1) நான்கு வருடங்களுக்கு முன்னால்
2) கோழிகள்-26 குதிரைகள் -17
3) 8712, 2178
4) 45
5) அம்மா : 78, மகன் : 87


## நீ எப்படி?



இளைஞனே
திறமைகள்
சிக்கல்களுக்கு இடையே
வாய்ப்பைத் தேடுபவன்
வெற்றியாளன்!
வாய்ப்புகளுக்கு
இடையே
சிக்கலைக் காண்பவன்
தோல்வியாளன்!
நீ எப்படி?

S. ஆபிதாபானு
சம்பகுடி

## நாயோட அலும்பு.



பக்கத்து வீட்டுக்காரரிடம் தனது நாயை விற்கப் போனார் ஒருவர்.

குரைக்கிறது மட்டுமல்ல... இந்த நாய் பேசவும் செய்யும். 50 ரூபா கொடுங்க போதும்! என்றார்.

ஏன்யா... நாய் பேசும்னு பொய் சொல்லி விக்க பார்க்கிற எங்காவது நாய் பேசுமா? என்றார். அவர்.

உடனே பக்கத்தில் இருந்த நாய் கண்ணீர் விட ஆரம்பித்தது. பக்கத்து வீட்டுக்காரரை பார்த்து, ப்ளீஸ் சார்! என்னை வாங்கிக்கோங்க... இந்த ஆள் என்னை ரொம்ப கொடுமைப்படுத்துறாரு. ஒழுங்கா சாப்பாடு போடுறதில்லை. குளிப்பாட்டி விடுறதில்லை. வாக்கிங் கூட்டிட்டு போறதில்லை. இன்னொரு விஷயம் தெரியுமா? அமெரிக்காவுலே இருந்தப்ப. நான் தான் அங்கே ரொம்ப ஃபேமஸ். ஜார்ஜ் புஷ், கிளிண்டன் முன்னாடியெல்லாம் நிறைய சாகசம் பண்ணிருக்கேன். மிலிட்டரியில் இருந்தப்ப கூட பத்து தடவை அணிவகுப்பு மரியாதையிலே கலந்துகிட்டு இருக்கேன் என்று பரிதாபமாகச் சொன்னது.

நாய் பேசுவதைப் பார்த்த பக்கத்து வீட்டுக்காரருக்கு அதிர்ச்சி. ஆமாய்யா! நாய் பேசுது. இதைப் போய் ஐம்பது ரூபாய்க்கு விக்கிறேன்னு சொல்றியே? என்றார்.

நாயை விற்க வந்தவர் அலுத்துப்போய் சொன்னார் இப்படி இது டெய்லி சொல்ற பொய்யை கேட்டுபோரடிச்சு போச்சு!

O. மணிகண்டன்

## மனிதனின் விலை



யானை இருந்தாலும் ஆயிரம் பொன், யானை இறந்தாலும் ஆயிரம் பொன் என்பார்கள். ஆனால் மனிதனின் விலை...

மனிதனின் உடலில் என்னென்ன இருக்கிறது ஒரு லிஸ்ட் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள் விஞ்ஞானிகள். வெகு நாட்களுக்கு முன்பாக டால்ஸ்டாய் என்ற அறிஞர் மனிதனே! உன் விலை என்ன? என்று கேட்டார். இந்தக் கேள்வி உலகப் பிரசித்தம். அந்தக் கேள்விக்கு பதில் சொல்லும் விதமாக விஞ்ஞானிகள் விலை சொல்கிறார்கள்.

ஒரு மனிதனின் உடலில் ஏழு பார் சோப்புகளை தயாரிக்கும் அளவுக்கு தேவையான கொழுப்பு இருக்கிறது. ஒரு சிறிய ஆணியை செய்யக்கூடிய அளவுக்கு இரும்பு இருக்கிறது. 5 அடிக்கு 5 அடி பரப்பளவு உள்ள 25 சதுர அடி சுவருக்கு மனிதனின் உடலில் உள்ள சுண்ணாம்பைக் கொண்டு வெள்ளை அடிக்கலாம்.

யாரைப் பார்த்தாலும் சர்க்கரை நோய் என்று ஓடுகிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு பெரிய சர்க்கரை தொழிற்சாலையே வைத்திருக்கிறார்கள் என்று நினைத்தால் ஏமாற்றம்தான். மனிதனின் உடலில் இருக்கும் சர்க்கரையைக் கொண்டு இரண்டு கப் காபியை மட்டுமே இனிப்பாக்க முடியும்.

பாஸ்பரஸ் மட்டும் கொஞ்சம் அதிகமாக இருக்கிறது. இந்த பாஸ்பரஸைக் கொண்டு 2 ஆயிரம் தீக்குச்சிகளைத் தயாரிக்கலாம். இந்த பாஸ்பரஸ் அதிகம் இருப்பதால் தான் சில சமயத்தில் சுடுகாட்டில் இரவு நேரங்களில் தானாக தீப்பிடித்து எரிகிறது. அதைத்தான் நம்மவர்கள் கொள்ளிவாய்ப் பிசாசு என்று பார்த்து பயப்படுகிறார்கள்.

மேலும் ஒரு சின்னக் கரண்டி மக்னீஷியமும் உடலில் உள்ளது. இது போக ஒரு சின்ன பீரங்கிக் குண்டை வெடிக்கும் அளவுக்கு தேவையான பொட்டாசியம் கொஞ்சம் கந்தகமும் உள்ளது. சரி இத்தனையும் விற்றால் என்ன விலை தேறும் என்கிறீர்களா? எல்லாம் சேர்த்து 100 ரூபாய்க்குள் தான் வருகிறது. மனிதனை விட விலங்குகள் அதிக விலை உள்ளதுதான்.

மனிதனின் மதிப்பு அவனது மூளைதான். அந்த சின்ன மூளையை வைத்துத்தான் இத்தனை பிரம்மாண்டமான உலகில் பல கண்டுபிடிப்புகளை உருவாக்கினான் மனிதன். அந்த மூளை விலை மதிப்பற்றது.

P. முனியசாமி

## சீரு செந்தமிழ் நூலக வாசிப்பரங்கத்தில் குழந்தைகளால் வாசிக்கப்பட்டவை..

தொகுப்பு : ப.பாண்டியராஜன்

### இலட்சியம்

தனக்கென்று ஓர் இலட்சியம்
கொண்டோர் எவரும்
அதற்காகப் பணியாற்றுகையில்
குறுக்குப் பாதைகள் கண்டால் அதிலே நுழைந்து
இலட்சியத்தை இழந்து விடச்
சம்மதிக்க மாட்டார்கள்
இலட்சியத்தை நோக்கிச் செல்வோருக்கு
அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அளிப்போரே
தலைவர்கள், நண்பர்கள், வழிகாட்டிகள்
ஞானாசிரியர்கள் .இடையில்
இளநீர் கொடுப்போர் நன்றிக்குரியோர்
இதயம் நோகப் பேசுவோர் பரிதாபத்துக்குரியோர்
உடனிருந்து கெடுப்போர் கண்டனத்துக்குரியோர்
பாதையின் பயணத்தின் கடுமைதாங்க மாட்டாமல்
பட்டுப்போனோர் அனுதாபத்துக்குரியோர்

நூல் பெயர் :அண்ணாவின் பல்சுவைகள்

### காரணம்



அந்த ஞானியிடம் ஒரு சீடன் கேட்டான்.

'விரதம் இருந்தால் பலன் கிடைக்குமா?'

சிரித்துக் கொண்டே சொன்னார்.

"கருணை மயமான இறைவன் தன் பக்தர்கள் தன்னை வருத்திக் கொள்வதை விரும்பவில்லை. விரதம் இருப்பது பசியின் கொடுமையை உணர்த்துவதற்காக... ஒவ்வொரு முறை உணவு உண்ணும் பொழுதும் மனநிறைவுடன் நன்றி செலுத்துவதற்காக.

இலையுதிர் காலம் என்பது வசந்தம் வரும் வரத்தை உணர்த்துவதாக"...

### என் இயக்கம்



மனித மேம்பாடே என் இயக்கம்
தோழமையே என் மேடை
தூய மனதினர் என்பேன்
உழைத்திடன் மக்கள் நன்மைக்கே
தூரத்தில் சிறு வழி கண்டு
துடித்திடும் போக்கினர் யாவரும்
தோழர்களாம் எந்தனுக்கே
துணைவராய் புனித
போர் தமக்கே !

நூல் பெயர் :அண்ணாவின் பல்சுவைகள்

### பாடம்

ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார்..

வழிபோக்கன் கதை

பூசணி பெரிய ஆலமரத்தில் இருந்திருந்தால் அல்லவா பொருத்தம் என நினைத்து இறைவனைத் திட்டியதாகவும், ஆலமரத்தடியில் படுத்துத் தூங்கும்போது ஒரு பழம் நெற்றியில் விழ வலியெடுத்து விழித்ததாகவும் "நல்ல வேளை இதில் பூசணி காய்த்திருந்தால் என்னாகும்" என உணர்ந்து... இறைவன் எல்லாம் அறிந்தவன் அவன் படைப்பில் ஏது குற்றம்?" எனத் தவறைத் தெளிந்ததாகவும் சொல்லிக் கொண்டிருந்தார். மாணவன் ஒருவன் எழுந்து கேட்டான்.



"ஐயா! கதை ஏனோ இடிக்கிறது உயரமான மரங்களில் பெரிய காய்களும் காய்க்கின்றனவே! எங்கள் வீட்டருகில் ஒருவர் தலைமேல் தேங்காய் விழுந்து அடிபட்டாரே! அதற்கென்ன சொல்கிறீர்"! மௌனம். ஆசிரியர் தனக்குச் சொல்லிக் கொடுத்த ஆசிரியரைத் திட்டிக் கொண்டிருந்தார் மனதிற்குள்ளேயே.

இறையன்புவின் சின்ன சின்ன வெளிச்சங்கள் நூலிலிருந்து...

### ஜூன் சிறப்பு நாட்கள்

4 அந்நிய வீறல்களால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தினம்
5 உலக சுற்றுச் சூழல் தினம்
12 சர்வதேச குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம்
17 சர்வதேச வறட்சி விழிப்புணர்வு தினம்
19 சர்வதேச தந்தையர் தினம்
20 சர்வதேச அகதிகள் தினம்
21 உலக சமாதான தினம் மற்றும் பிரார்த்தனை தினம்
26 போதைப் பொருள் எதிர்ப்பு தினம்

தொகுப்பு : என்.ராம்குமார், எஸ்.சுல்தான், எம்.தங்கலெட்சுமி

# உணவுப் பழக்கங்கள்



நல்ல உணவு வகைகளை உண்பது மட்டுமே ஆரோக்கியத்தை வழங்கி விடாது. நல்ல உணவு பழக்கமும் தேவை.

உண்ணும்போது எதைப்பற்றியும் சிந்திக்காமல் உடலை ஓய்வாக, தளர்வாக வைத்திருக்க வேண்டியது அவசியம்.

நின்று கொண்டு, நடந்து கொண்டு உண்பதை முற்றிலுமாக தவிர்ப்பது நல்லது. நன்கு அமர்ந்து உண்பதே நல்லது.

உணவு உண்ண குறைந்த பட்சம் அரைமணி நேரமாவது ஒதுக்குங்கள்.

உண்ணும்போது விவாதங்கள் செய்வதோ, புத்தகம் படிப்பதோ, தொலைக்காட்சி பார்ப்பதோ, தவிர்க்கப்பட வேண்டியவை (பின்பற்ற கடினமானதும் கூட)

பதப்படுத்தப்பட்ட உணவுகள் எந்தவிதத்திலும் தேவையான சத்துக்களைத் தராதவை. அவற்றை தவிர்ப்பது நல்லது.

நல்ல காலை உணவு, மிதமான மதிய உணவு மற்றும் மிதமான இரவு உணவு என்று வழக்கப்படுத்துங்கள்.

இரண்டு உணவு வேளைகளுக்கு இடையே பசியெடுத்தால் பழவகைகள், சாண்ட்விச்சுகள், காய்கறிகள், மிதமான உணவுகள் போன்றவற்றை உண்ணலாம்.

உறங்கப் போகும்முன் அதிகமாக உண்பது தவிர்க்கப்பட வேண்டும்.

போரடிக்கும் போதெல்லாம் உண்பதும் தவிர்க்கப்பட வேண்டும்.

## தலைமுடி பராமரிப்பு :—



தலைமுடிகள் இறந்த செல்களால் ஆனவைதான் என்றாலும் அவற்றுக்கு உரிய பராமரிப்பு மிகுந்த அவசியமாகிறது. தினமும் அவற்றை சுத்தம் செய்தல், நன்றாக வாருதல் மிகவும் அவசியமாகிறது.

தலைமுடிதானே என்று தானே அலட்சியம் செய்யாதீர்கள். தலைமுடிக்கு நீங்கள் பயன்படுத்தும் எண்ணெய், ஷாம்பு முதலியவற்றில் உள்ள பொருட்கள் மயிர்க் கால்கள் வழியாக தோலின் உட்புறங்களுக்குச் சென்று தங்கும் வாய்ப்பு உள்ளது. அதனால் நீங்கள் பயன்படுத்தும் பொருட்களில் அதிக கவனம் இருக்கட்டும்.

அதிகமாக ஷாம்பு, சோப் உபயோகிப்பதால் தலைமுடி, சருமம் பாதிக்கக்கூடும். அவற்றை அளவோடு பயன்படுத்துங்கள். ஒரு நாளைக்கு பல தடவை தலை வாருவது உங்களுக்கு எந்தவிதத்திலும் பயன்தர போவதில்லை. மாறாக முடிகொட்டுவதுதான் அதிகரிக்கும்.

- என்.மருதுபாண்டி

## கல்வி நெருப்பில் கதறும் குழந்தைகள்



சுதந்திரத்துக்குப் பிந்தைய இந்தியாவை உருவாக்கியவர்களில் தொடங்கி, இன்றைய ஜனாதிபதி அப்துல்கலாம் வரை எல்லோரும் ஆரம்பக் கல்வியை முறையாகக் கற்றவர்கள்தான். ஆனால், இப்போது ஆரம்பக் கல்வி என்பது மாறி, ஆங்கிலக் கல்வி என்கிற வாடகைத் தாயிடம் நம் குழந்தைகளை அனுப்பி வைக்கிறோம். ஒரு குழந்தைக்குத் தாய்மொழி தெரிந்திருந்தால்தான் படிக்கிற ஆங்கிலமும் பயன்படும். இது கல்வியின் அடிப்படை! தாய்மொழி தெரியாவிட்டால் ஆங்கிலம் மட்டும் தெரிந்த ஓர் இயந்திர மனிதனாகவே குழந்தை வளரும். எல்லாப் பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகள் டாக்டர், இன்ஜினீயர் ஆக வேண்டும் என்று தான் கனவு காண்கிறார்கள். கல்வி வணிகமயமாக்கப்பட்டதன் விளைவுதான் இந்தச் சீரழிவு சிந்தனை. தமிழ் மட்டுமே தெரிந்த ஒரு குழந்தைகளை இழிவாகப் பார்ப்பதும் இதன் விளைவுதான்.

குழந்தைகளின் உலகத்திலிருந்து நாம் பறித்துக்கொண்ட இன்னொரு விஷயம், அவர்களின் விளையாட்டு! குழந்தைகளுக்கு விளையாடவே இன்று நேரம் இல்லை. இடமும் இல்லை. பெற்றோர்களின் அனுமதியும் இல்லை. விளையாட்டு தான் குழந்தைகளுக்குச் சுதந்திரத்தை வழங்கும். சுய சிந்தனைத் திறனை வளர்க்கும். வெளியில் போய் விளையாடுகிற குழந்தைகள் தான் ஆரோக்கியமாக சுவாசிக்கவும் செய்கிறார்கள். ஆனால், வீட்டுப் பாடம், டியூஷன் போக குழந்தைகளின் மீதி நேரத்தை இன்று தொலைக்காட்சிகள் வேறு பறித்துக்கொள்கின்றன.

ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை அனைவருக்கும் பொதுவான, தரமான, சமமான கல்வி அமைப்பை உருவாக்கும் அரசியல் அறம் நமது அரசியல்வாதிகளிடம் உருவாகும் வரை இந்த ஏக்கங்கள் தீர்வதற்கு வழியில்லை. பெற்றோர்கள், எழுத்தாளர்கள், சமூகப் பணியாளர்களைக் கொண்ட குழுக்களை அமைத்து, குழந்தைகளின் வாழ்க்கை பற்றிய ஆய்வை அரசே செய்ய வேண்டும். அர்ப்பணிப்பு உணர்வோடு குழந்தைகளை இன்றைய பள்ளிக்கூடங்களிடமிருந்து காப்பாற்ற வேண்டும். குழந்தைகளிடம் பள்ளியின் மீதும் கல்வியின் மீதும் காதலை உருவாக்கும் வண்ணம் கல்வித் திட்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். கல்வி கற்பதையே ஒரு தண்டனையாகப் பார்க்கும் மனோபாவத்தைக் குழந்தைகளின் மனதிலிருந்து மாற்ற வேண்டியது இன்றைய அவசர, அவசியத்தேவை!

நன்றி: ஆனந்தவிகடன். —ச.தமிழ்ச்செல்வன்.

---

## 15 வயதிலே பத்திரிக்கை வெளியிட்ட பையன்

எதைப் பற்றியும் தீவிரமாக சிந்திக்கும் தாமஸ், உள்ளூர்ச் செய்திகளை கூடாக தருவதற்காக ஒரு பத்திரிக்கையைத் தானே ஏன் தொடங்கக் கூடாது என்று எண்ணினான். உடனே செயல்பட்டான். வீக்லி ஹெரால்ட் என்ற பத்திரிக்கை உதயமானது. அந்த அந்த பத்திரிக்கைக்கு எடிசனே ஆசிரியர், நிருபர், அச்சு கோர்ப்பவர், வெளியிடுபவர், விற்பனையாளர், அச்சடிக்கும் இயந்திரம் ஒன்றை ரயிலுக்குள்ளேயே வைத்திருந்தான். ஒரு பத்திரிக்கையின் விலை 3 சென்ட் ஒரு மாதச் சந்தா 8 சென்ட், 300 சந்தாதாரர்கள் சேர்ந்தார்கள். ஒரு சில அச்சுப்பிழைகள், எழுத்துப் பிழைகள் தவிர பத்திரிகை மிக நன்றாகவே அமைந்திருந்தது. லண்டன் டைம்ஸ் என்ற பத்திரிகை தாமஸின் பத்திரிகை முயற்சியை புகழ்ந்து எழுதியது. உலக வரலாற்றிலேயே ரயிலில் அச்சடிக்கப்பட்ட முதல் பத்திரிகை அதுதான். ஒரு பதினைந்து வயதுப் பையன் பத்திரிகை ஆசிரியராக இருந்து வெளியிட்ட பத்திரிகையும் அதுதான்.

– சி. அருண்குமார்

2006-2007 ஆம் கல்வியாண்டு தேர்வுகளில் நமது பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகள் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்விலும், 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்விலும் பரவலாக சிறப்பான இடங்களை பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிந்து சீட்டுப்ரஸ்ட் மகிழ்கிறது. வாழ்த்துக்கள்!

**10-ஆம் வகுப்பு சிறப்பிடம் பெற்றவர்கள்**

| | |
|---|---|
| நத்தனேரி வெள்ளிமுடி | 435/500 |
| சம்பகுடி சபிதாபானு | 415/500 |
| கரும்பாலை P. சரவணக்குமார் | 410/500 |
| கரும்பாலை கற்பகஜோதி (ஆங்கிலவழி) | 405/500 |

**பன்னிரெண்டாம் வகுப்பு சிறப்பிடம் பெற்றவர்கள்**

| | |
|---|---|
| கரும்பாலை S. விக்கி | :1037/1200 |
| கரும்பாலை P. சரண்யா | :954/1200 |
| கரும்பாலை P. வினோத் | : 935/1200 |
| கரும்பாலை P. முனியசாமி | : 895/1200 |

நாம் வாழும் பகுதிகளில் குடும்ப சூழல், கல்வி சூழல் பொருளாதார நெருக்கடிகள் சார்ந்த கல்வி கரையை கடப்பது என்பது அவ்வளவு எளிதன்று. இருப்பினும் சாதனைகள் கண்ட நம் பகுதி குழந்தைகளுக்கு எம் நெஞ்சார்ந்த பாராட்டுக்கள்.

**செங்குந்தர் பள்ளி 10-ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களை பெற்றவர்கள் கரும்பாலை மாணவர்களே!**

1) P.சரவணக்குமார் 410, கரும்பாலை
2) A.பாரதிதாசன் 407, S.M.நகர்
3) N.ஜோதி 396, கரும்பாலை

பாராட்டுக்கள்!

**மதுரை மாநகராட்சி பள்ளிகளில் 10-ஆம் வகுப்பு சிறப்பிடம்**


| | |
|---|---|
| திரு.வி.க. பள்ளி மாணவர் அப்துல் கபூர் | - 476 |
| திரு.வி.க. பள்ளி மாணவர் மெகருன்னிஷா | - 466 |
| ஈ. வே.ரா. பள்ளி மாணவி துர்க்காதேவி | - 466 |
| O.C.P.M பள்ளி - மாவட்ட அளவில் ஹமீம் சுபைதா ஜன்னா | - 483 |
| O.C.P.M பள்ளி - மாவட்ட அளவில் சாருமதி (ஆங்கிலத்தில் சிறப்பிடம்) | - 482 |
| O.C.P.M பள்ளி மாவட்ட அளவில் எஸ்தர் சிரேசியா | - 483 |
| தியாகராஜா பள்ளி. செந்தில் வேல் | - 482 |
| தியாகராஜா பள்ளி. அருண்குமார் | - 481 |

## மாநில சிறப்பிடம்

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த குழந்தைகளில் மாநில சிறப்பிடம் பெற்றவர்

| S.No. | Name | Rank | Subject | School |
|---|---|---|---|---|
| 1 | AR Ayesha Mariam | I | Commerce | Dolphin MAT HSS,Madurai |
| 2 | M. Arvind | I | Bio-Chemistry | Mahatma MMHSS, Alagarkoil |
| 3 | K. Deepa Rani | I | Geography | Manu Girls Hss, Keeraturai |
| 4 | P.Pitchaimani | I | Vegetables & Fruits | Manu Girls HSS Kottaipatti |
| 5 | M. Murugan | I | Ethics and Indian Culture | NSHSS, Usilampatti |
| 6 | M. Pandi Selvi | I | Nursing Course | EVRN Corp HSS, Madurai |
| 7 | N. Muthumilmaninegala | II | Nursing Course | RCLF Girl HSS, Usilampatti |
| 8 | P. Muthu | II | Vegetables & Fruits | Parashakti HSS Kottaipatti |
| 9 | S. Vikki | III | Ethics and Indian Culture | Thiyagarajar Model HSS, Madurai |
| 10 | R. Sudhalakshmi | III | Vegetables & Fruits | Parasakti HSS S Kottaipatti |
| 11 | K. Kavitha | III | Nursing Course | RCLF Girl HSS MDU, Melur |
| 12 | S. Azhshendran | II | Political science | Balamandiram HSS MDU, Melur |
| 13 | M. Muthu Manickam | III | Advance Languages | Corporation TVKA HSS, Melur |
| 14 | P. Vijipriya | III | Dairying | Parasakti HSS School, Kottaipatti |

# சீடு டிரஸ்ட் நடவடிக்கைகள் – மே 2007



| | |
|---|---|
| 1-5-2007 | புதுயுகம் இதழ் வாசிப்பும் விமர்சன அரங்கும் வாண்டுகள், வேர்கள், கனவுகள் அரங்க குழந்தைகளுக்கு தனித்தனியே நடத்தப் பெற்றது. நடத்தியவர் : **A.S.**கார்த்திக் பாரதி |
| 2-5-2007 | சீடு டிரஸ்ட் குழந்தைகள் சித்திரை திருவிழாவினை கண்டு மகிழ்ந்தனர். |
| 3-5-2007 | மாநகராட்சி பள்ளி குழந்தைகளுக்கான கோடை கற்றல் வகுப்புகள் மத்திய, மாநில அரசுகளின் அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பாக நடத்தப்பெற்றது. இதில் சீடு டிரஸ்ட் பரிந்துரையின் பேரில் இந்திரா நகர் முத்துப்பிரியா பணியமர்த்தப்பட்டார். கரும்பாலை மாநகராட்சிப் பள்ளியில் 3-5-2007 முதல் 25-5-2007 வரை குழந்தைகளுக்கு கற்பித்தல் நிகழ்வுகள் நடத்தப் பெற்றன. |
| 4-5-2007 | வாண்டுகள் அரங்கத்தில் மாயச் சட்டை நாடகமும், கலை நிகழ்வும் நடத்தப் பெற்றது. நிகழ்த்தியவர் : சுந்தர் ராஜன் |
| 6-5-2007 | அரசு சித்திரைப் பொருட்காட்சி சீடு டிரஸ்ட் குழந்தைகள் கண்டு மகிழ்ந்தனர். பொறுப்பேற்றவர் : **K.**அன்பரசன் |
| 9-5-2007 | சீடு டிரஸ்ட் பெற்றோருக்கு அன்னையர் தின வாழ்த்துகள் வழங்கப்பட்டன. |
| 10-5-2007<br>11-5-2007<br>12-5-2007 | வசந்த முகாம் திட்டமிடல் கூட்டங்கள் நடைபெற்றன. சீடு டிரஸ்ட் பணியாளர்கள், தொண்டர்கள் குழந்தைகள், பிரதிநிதிகள் பங்கு கொண்டு முகாம் வடிவமைப்புக்கு உதவினார்கள். |
| 13-5-2007<br>14-5-2007 | சிவகங்கை கழுகுமலை திருவிழா கள ஆய்வில் கனவுகள் அரங்க குழந்தைகள் பங்கு கொண்டு சமணர் மலை குடைவரை ஓவியங்களை கண்டு மகிழ்ந்தனர். ஏற்பாடு : **K.**அன்பரசன் |
| 14-5-2007 | 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு முடிவு. சீடு டிரஸ்ட் குழந்தைகள் 100% தேர்ச்சி. சீடு குழந்தைகளால் முதலிடம் பெற்றமைக்கும் மாநில அளவில் இந்திய கலாச்சாரம் பாடத்தில் சிறப்பிடம் பெற்ற **S.**விக்கிக்கு கரும்பாலையில் நிர்வாக அரங்காவலர் **A.S.**கார்த்திக்பாரதி தலைமையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. நிகழ்வில் ஏராளமான பெற்றோர்கள், குழந்தைகள் பங்கு கொண்டனர். |
| 15-5-2007<br>16-5-2007 | வசந்த முகாமில் பங்கு கொள்ள குழந்தைகளை அழைக்கும் நிகழ்வு வீதி வீதியாக நடந்தது. |
| 17-5-2007<br>25-5-2007 | கரும்பாலை மாநகராட்சி பள்ளியில் சீடு டிரஸ்ட் சார்பாக வசந்த முகாம் 2007 சுமார் 9 நாட்கள் சிறப்பாக நடத்தப் பெற்றது. முகாமினை நடத்தியவர்கள் : சீடு டிரஸ்ட் பணியாளர்கள், **S.**முத்துக்குமார் |
| 26-5-2007 | சீடு வான்முகில் கலைக்குழு நடன பயிற்சியினை நடன கலைஞர் தங்கபாண்டி வழங்கினார். |
| 27-5-2007 | தொண்டர் சீர்மிகு காளீஸ்வரியின் திருமண விழாவில் திரளாக சீடு குழந்தைகள் **A.S.**கார்த்திக்பாரதி தலைமையில் கலந்து கொண்டனர். வண்ணமயமான கலைநிகழ்வும் நடத்தப் பெற்றது. |
| 28-5-2007<br>29-5-2007<br>30-5-2007 | மாநில அளவிலான குழந்தைகள் பங்கேற்பிற்கான குழந்தைகள் இயக்கங்களின் கூட்டமைப்பு பிரிதிநிதிகளுக்கு **Capacity building** பயிற்சி பட்டறை **RTI** பெத்தேல் பண்ணையில் நடந்தது. சீடு குழந்தைகள் பேரவையின் தலைவர் மகுடபதி பங்குகொண்டு சிறப்பு பெற்றார். |
| 31-5-2007 | **X** தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டன. சீடு டிரஸ்ட் குழந்தைகள் 100% தேர்ச்சி |

பதிவு : **S.** முருகபாண்டி

# சீடு வசந்த முகாம் - 2007

**(நலிவுற்ற குழந்தைகளுக்கான கோடை விடுமுறை ஆளுமை மேம்பாட்டு பணிகளில்)**

**இயக்கம் : S. முத்துக்குமார்  ஒருங்கிணைப்பு : K.அன்பரசன்  ஏற்பாடு : A.S.கார்த்திக்பாரதி**

எமது சீடு அறக்கட்டளையின் கோடை விடுமுறை கால நடவடிக்கையாக முகாம் நடத்திட வேண்டும் என்பது கடந்த மூன்று மாத கால யோசனை மற்றும் திட்டமிடலாக இருந்தது. இந்த முகாமின் முழுவடிவமைப்பு மற்றும் கருத்தாக்கம் , செயலாக்கம் யாவும் இயக்குநர் முத்துக்குமார் தலைமையில் பாங்குற நடைபெற்று முடிந்தது. சீடு அறக்கட்டளை குழந்தைகளின் முழு பங்கேற்புடன் வசந்தமுகாம் தினசரி திட்டம் தயாரானது. வசந்தம் 2007 என்பதாக குழந்தைகளின் குரல்களாய் உயிர் பெற்றது.

வசந்தமுகாம் கரும்பாலை, சம்பகுடி, தத்தனேரி, மானகிரி, இந்திரா நகர், P.T.காலனி மற்றும் S.M.நகர் பகுதிகளைச் சேர்ந்த நலிவுற்ற குழந்தைகளின் கோடைகால விடுமுறையை பயனுள்ளதாக வேண்டும் அவர்களின் ஆளுமை மற்றும் கற்றல் திறன்களை மேம்பாடு அடையச் செய்ய வேண்டும் என்பதை நோக்கங்களாக கொண்டிருந்தது.



15 பேர் கொண்ட ஐந்து குழுக்கள் வசந்த முகாமினை சிறப்பாக்கின. குதூகலம், ஆரவாரம், உற்சாகம், கும்மாளம், ஆனந்தம் என பிரிக்கப்பட்ட குழுக்களில் C.அருண்குமார், R.வினோத், M.மருதுபாண்டி, P.மணிகண்டன், S.சுல்தான் போன்றோர் தொண்டர்களாக பொறுப்பேற்றிருந்தனர். முதல் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை உள்ள 75 பேர் பங்கு கொண்ட இந்நிகழ்வு 17-05-2007 முதல் 25-5-07 வரை கரும்பாலை மாநகராட்சி பள்ளியில் நடைபெற்றது. 9 நாட்கள் நிகழ்ந்த வசந்தமுகாம் இனிய குழந்தைகள் உலகமாக சிறந்தகுடும்பமாக மாறிவிட்டிருந்தது.

வசந்த முகாமினை கரும்பாலை மாநகராட்சி பள்ளி தலைமையாசிரியர் அருண்மொழி மதுரம், ராதா கிருஷ்ணன், IAS பயிற்சி மாணவிகள் குணசுந்தரி, புஷ்பகனி, சீடு டிரஸ்ட் மூத்த தொண்டர் சுரேஷ்குமார், LDC மாணவிகள் கயல்விழி, அம்பிகா, முத்துப் பிரியா, வடமலையான் கல்லூரி மாணவி கிருஷ்ணவேணி, டேபிள் டென்னிஸ் ஆசிரியர் ராஜா, 11 வது வார்டு கவுன்சிலர் V. கருப்பையா போன்றோர் பார்வையிட்டு குழந்தைகளை உற்சாகப்படுத்தினர்.

முகாமின் ஒவ்வொரு நாள் செயல்பாடுகளும், உரிய கருப்பொருளுடன் நடைபெற்றன. துவக்க நாள் சாகச நாள், சுவையின் நாள், அன்பின் நாள், கலாச்சார நாள், சுற்றுச் சூழல் நாள், உதவும் நாள், நட்பின் நாள், நிறைவு நாள், என்ற கருப் பொருளுடன் தொடர்புடைய தினசரி நடவடிக்கைகளும், கலைநிகழ்ச்சிகளும் நடந்தன. 20க்கும் மேற்பட்ட பாடல்கள் குழந்தைகளுக்கு கற்றுத் தரப்பட்டன. கதை சொல்லுதல், ஓவியம், களிமண்ணில் கை வண்ணம், நாடகம், கொலாஜ் கலை, முகமூடி செய்தல், நடனம் கற்றல் என பல கற்றல் பயிலரங்குகள் நடைபெற்றன. தேவையற்ற பொருட்களை கொண்டு கிராமங்களை உருவாக்குதல், சாகசங்கள் செய்தல், சமைத்தல், (குழந்தைகளே தாங்கள் வீடுகளிலிருந்து கொண்டு வந்த பொருட்களைக் கொண்டு 30 வகையான உணவு வகைகளை சமைத்திருந்தனர்.) அன்பின் அடையாளங்களை உருவாக்குதல், நட்பின் அடையாளங்களை உருவாக்குதல், கலாச்சார அடையாளங்களை படைத்தல், (விதவிதமான குடில்களை அமைத்தல் மற்றும் உடையலங்காரங்கள் செய்து கொள்ளுதல்) சுற்றுச்சூழல் பாதுகாப்பு உணர்வு பெற இராஜாஜி பூங்கா செல்லுதல், உதவும் நாளில் பொருட்கள், உணவு தயார் செய்து விற்று, அந்த பணம் மூலம் பிற பயன்பாடுகளுக்கும் உதவி செய்தல், நட்பின் அடையாளங்களை உருவாக்கி பரிமாறுதல், தனித் திறமைகளை வெளி கொணர்தல் போன்றவை புதுமை நோக்கில் குழந்தைகளின் சிந்தனையிலும், படைப்பிலும் உருவாயின.

30 வகையான விளையாட்டுக்களை குழந்தைகள் விளையாடி மகிழ்ந்தனர். முகாமில் குழந்தைகளுக்கு தேவையான உதவிகளை வழங்கிட பாஸ்கர ராஜா, ராம்குமார், சுறுசுறுப்பாக பணியாற்றினர். குழந்தைகள் மகிழ்ச்சியாக முழு ஈடுபாட்டுடன் குழுவில் உழைக்க மதிப்பெண்கள் வழங்கப்பட்டன. முதலிடத்தில் R.வினோத் தலைமையிலான ஆரவாரம் குழு வந்தது. முதலிடம் பெற்ற குழுவினருக்கு கணகவர் பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டன. தினசரி குழந்தைகளுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டன. பங்கேற்ற அனைவருக்கும் சான்றிதழ்களும், புதுயுகம் சிற்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இனிய வசந்த முகாம் நடவடிக்கைகளை உள்ளூர் தொலைக்காட்சி சானல்கள் அற்புதமாக வெளியிட்டு இருந்தன. வண்ண மலர்க் கொத்துகள் செய்தது, உதவும் நாளில் விதவிதமான கடை முதலாளிகளாக மாறியது, கலை நிகழ்வுகளில் அற்புதமான கலைஞர்களாக தங்களை வெளிக்காட்டிக் கொண்டது, புதிய அடையாளங்களை உருவாக்கி கைதேர்ந்த படைப்பாளிகளாக காண்பித்தது என வசந்தம் குழந்தைகள் முகாம், 2007 பன்முகமாய் பயன் தந்து விடைபெற்றுச் சென்றது.

நலிவுற்ற பகுதிகளில் விடுமுறையை பயனுள்ளதாக செலவழிப்பதில் உள்ள சிக்கல்களை களைந்து சீடு அறக்கட்டளை ஒரு இனிய முகாம் நடத்தி புதிய சாதனையை பதிவு செய்துள்ளது. இந்த முகாம் நடத்த உதவி புரிந்த மாநகராட்சி நிர்வாகத்தினருக்கும், பிற உள்ளங்களுக்கும் எம் இயக்குனர் முத்துக்குமாருக்கும் அறங்காவலர் அன்பரசனுக்கும் நன்றிகள் பல...

**பதிவு : A.S. கார்த்திக் பாரதி**

**எத்தனை பெரிய வானம்**
**எண்ணிப்பார் உன்னையும் நீயே**
**இத்தரை கொசியார் ஒப்ப**
**நீ அதில் சிற்றெறும்பு!**




**-பாவேந்தர் பாரதிதாசன்**

# வசந்த முகாம் அனுபவ பகிர்வுகள்

இந்த 4 நாள் [illegible] வசந்த முகாம் [illegible] பல [illegible] [illegible] புதிய [illegible] [illegible] புதிய பாடல்களும் [illegible]

[illegible]

[illegible]






[illegible]

Quiz program மூலம் எங்களின் அறிவுத்திறன் மேம்பட்டது. சைகைகள் மூலம் எங்களின் திறமையை வெளிப்படுத்தினோம். பல பாடல்களைக் கற்றுக் கொண்டோம். இந்திய வரைபடத்தை பற்றி தெரிந்துக் கொண்டோம். இந்த Camp மூலம் கற்றுக்கொள்ளும் [illegible] [illegible] நீக்கினோம். எங்களின் தனித்திறமைகளையும் வெளிப்படுத்தினோம். நிறைய விளையாட்டு எங்களுக்கு உதவியது. எங்கள் அறிவுக்கும் [illegible] இருந்தது. [illegible] [illegible] தெரிந்து கொண்டோம்.

போர்செல்வி
அருணாச்சலம் [illegible]

மே 07, 07



அன்புள்ள கார்த்தி,

நலம். நலமே பெறுக.

புதுயுகம் இரண்டாவது இதழ் கிடைத்தது. முதல் இதழை விட இதன் வடிவ அமைப்பும் அளவும் நேர்த்தியாக இருக்கின்றன. பொருளடக்கத்தின் தரம் குறையாமல் இருக்கிறது.

மாணவர் இதழ் புதிய செய்திகளையும், வாழ்க்கை நெறிகளையும் தருவது பாராட்டத்தக்கது. அரசியல் அறிவுக்கான கட்டுரையும் புத்தக அறிமுகக் கட்டுரையும் இன்னும் எளிய நடையில், சாதாரண மாணவனுக்கும் புரியும் நடையில் இருக்கலாம். இப்படிக் கட்டுரைகளைப் பற்றி அடுத்த இதழில் மாணவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம்; விவாதம் நடத்தலாம். இனி வரும் இதழ்களில் மாணவர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் ஊழல், சாதிக் கொடுமை, வறுமை முதலியவற்றை அவர்கள் அனுபவத்தின் வாயிலாகவே விளக்கலாம்.

பொதுவாக, இதழின் பொருள்கள் மாணவர்களின் வாழ்க்கையிலிருந்து வருவது நலம். அவர்களுடைய தாய்மார்கள் வாய்மொழியாகச் சொல்லும் கதைகளை, பாடல்களை எழுதித் தரலாம்.

மாணவர் இதழின் மற்றொரு அம்சம் அவர்களின் படைப்பாற்றலை வளர்ப்பது. இதில் வெகுஜனப் பத்திரிக்கைகளில் வரும் பகுதிகளிலிருந்து வேறுபாடு என்ன செய்யலாம் என்றும் யோசிக்கலாம். கவிதைகள், ஜோக்குகள் எல்லாப் பத்திரிக்கைகளிலும் வருகின்றன. இவற்றோடு நிற்காமல் வேறு என்ன செய்யலாம்? மாணவர்கள் செயலில் ஈடுபடும்படி சில செய்யலாம். உதாரணமாக, மாணவர்களின் சொற்களஞ்சியத்தை வளமாக்க, குறுக்கெழுத்து, எழுத்துக்களைச் சேர்த்துச் சொற்கள் உண்டாக்குதல், பொருள்களுக்குப் பெயரிடுதல், எழுத்து மாறுவதால் பொருள் மாறும் சொற்களை இனம் காணல், ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் சொல்லுதல் முதலியவற்றைச் சொல்லலாம்.



மாணவர்களின் முயற்சி வெற்றிபெற வாழ்த்துக்கள்.

அன்புடன்,

அண்ணாமலை

---

பேராசிரியர் இ.அண்ணாமலை (1938) உலக அளவில் மதிக்கப்படும் மொழியியல் அறிஞர் சிகாகோ பல்கலைக்கழகத்தில் பிஎச்டி. பட்டம் பெற்றவர். மைசூரிலுள்ள இந்திய மொழிகளுக்கான மைய நிறுவனத்தில் (Central Institute of Indian Languages - CIIL) பேராசிரியாகவும் இயக்குநராகவும் பணியாற்றியவர் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான், நெதர்லாந்து முதலிய நாடுகளின் உயராய்வு மையங்களில் வருகைப் பேராசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். யேல் பல்கலைக்கழகத்தில் சிறப்பு நிலைப் பேராசிரியராக அமர்ந்து தமிழ்ப் பயிற்சி வழங்கி வருகிறார். க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, தற்கால மரபுத்தொடர் அகராதி, மொழிநடைக் கையேடு ஆகியவற்றின் உருவாக்கத்தில் முக்கியப் பங்காற்றியிருக்கிறார். இவர் எழுதிய நூல்கள் Adjectival clauses in Tamil. Managing Multilingualism in India; (ed) Language Movements in India. அ.க. கார்த்திக்பாரதியின் நற்பணிகளுக்கும், Seed அறக்கட்டளைக்கும் உறுதுணையாக இருந்து வருகிறார்.

– [illegible]

வாசகர்களிடமிருந்து புதுயுகம் சிற்றிதழ் குறித்து கருத்துக்களையும், விமர்சனங்களையும் மேற்கண்டவாறு எதிர்பார்க்கின்றோம்.
நன்றி பேராசிரியர் அண்ணாமலை அவர்களே! வாசக நண்பர்களே!

மாதந்தோறும் சீடு அறக்கட்டளை சார்பாக கல்லூரி இளைஞர்களுக்கு மனித உரிமைகள், குழந்தை உரிமைகள், உலகமயமாகுதல், சமத்துவக் கல்வி, ஆளுமை மேம்பாடு, தன்னம்பிக்கை போன்ற பொருட்களில் பயிற்சி பட்டறைகள் நடத்தப்பட உள்ளன. கல்லூரி இளைஞர்களை பங்கேற்க அழைக்கின்றோம்.

**சீடு அறக்கட்டளை**
**தொடர்புக்கு : 0452 - 6456503**



சுய தொழிலும், சுய முன்னேற்றத்திலும் ஆர்வமிக்கவர்கள் தேடல் இளைஞர் வங்கி உறுப்பினராக வரவேற்கப்படுகிறார்கள்.

**M.பெத்துராஜா, O.மோகன்**
**தொடர்புக்கு : 9366713170, 9363201239**

நமது தேவைகளை நாமே நிறைவு செய்திட தேன்கூடு குழந்தைகள் வங்கி உறுப்பினராவோம். 5 வயது முதல் 18 வயது நிரம்பிய குழந்தைகள் அனைவரும் சேமிக்கலாம்.



**K.அன்பரசன்**
**தொடர்புக்கு : 9894918130**


தேவையான உயர்கல்வி வழிகாட்டல்களுக்கு, ஆலோசனைகளுக்கு அணுகுக.



**சீடு செந்தமிழ் நூலகம்**
**A.S.கார்த்திக்பாரதி**
**தொடர்புக்கு : 9894805446**

புதுயுகம் சிற்றிதழுக்கு குழந்தைகள், இளைஞர்கள் தங்கள் படைப்புகளை கீழ்கண்ட பிரிவுகளில் அனுப்பலாம்.

| | |
|---|---|
| **I to IV** | : **வாண்டுகள் அரங்கம்** |
| **V to VIII** | : **வேர்கள் அரங்கம்** |
| **IX to XII** | : **கனவுகள் அரங்கம்** |
| **கல்லூரி இளைஞர்கள் மற்றும் பிற இளைஞர்கள்** | : **தேடல்கள் அரங்கம்** |



*Publishers* Mr. A.S. KarthikBharathi 9894805446
Mr. K.P.Anbarasan

*Honorary Editor* Mr. S.Muthukumar *Editor* C.T.Premkumar

*Editorial Board* C.T.Arunkumar, C.K.Karbagajothi

*Communication Address* PUDHUYUGAM - MONTHLY, SEED TRUST
Arjun Shanmuga Illam, 439/1, East Street, Karumbalai, Madurai-20.
Ph :0452 - 6456503, askb_seedaarpanigal_2000@yahoo.com

ஸ்ரீ முத்தன் பிரிண்டர்ஸ், 13, E2 E2 ரோடு, சி.எஸ்.ஐ. சர்ச் பின்புறம், மதுரை – 625 002. போன் : 3256908, 9865935571

மதுரையில் 7 பகுதிகளைச் சேர்ந்த நலிவுற்ற குழந்தைகள் இளைஞர்களின் முழுமைத்துவக் கல்வி மற்றும் குழந்தை உரிமைகளுக்காக பணியாற்றும் அமைப்பு சிறு அறக்கட்டளை

| திட்டங்களும், நிகழ்வுகளும் | திட்டமுறைகள் / நோக்கம் | ஒருங்கிணைப்பு | பணி பொறுப்பு | குழந்தை மற்றும் இளைஞர் பிரதிநிதிகள் | தொண்டர் பொறுப்பாளர் |
|---|---|---|---|---|---|
| சிறு வாசகர் அரங்கம் | இனிய குழந்தைகள் உலகம் படைப்பதற்கான முயற்சி | S.முத்துக்குமார் | K.அன்பரசன் | டேவிட் A.முகாம்பிகா | M.தங்கவேலாயுதம் |
| சிறு கலைகள் அரங்கம் | | | S.முத்துக்குமார் | ஷர்மிளா, O.வீரபாண்டி | P.முனியசாமி |
| சிறு கலைஞர் அரங்கம் | | | A.S.கார்த்திக் பாரதி | சுரேஷ்ராமன், கற்பகஜோதி | R.கார்த்திக் |
| சிறு தேடல் அரங்கம் | கல்லூரி இளைஞர்களுக்கான ஆலோசனை மற்றும் பட்டறை | | | O.மணிகண்டன் | |
| சிறு குழந்தைகள் பேரவை | குழந்தை பருவம் எங்கள் உரிமை கூடி உழைத்து பெறுவோம் வா வா | | S.முத்துக்குமார் | P.சரவணகுமார், M.மதுபதி | |
| சிறு இளைஞர் பேரவை | சமூக மாற்றத்திற்கான புதிய குரல்கள் | | | S.முருகபாண்டி | |
| சிறு செந்தமிழ் நூலகம் | வாசிப்பே வளமை முழுமைத்துவக் கல்வி மற்றும் குழந்தைகள் உரிமைக்கான ஆய்வு மற்றும் ஆவண மையம் | A.S.கார்த்திக் பாரதி | A.S.கார்த்திக் பாரதி | P.பாண்டியராஜன், M.தங்கமலைச்சாமி | |
| சிறு பூமகள் குழந்தைகள் இதழ் | மாசில்லா உலகை நற்பணிகளால் காப்போம் | | | C.அருண்குமார், C.கற்பகஜோதி | C.பிரேம்குமார் |
| சிறு தென்றல் மன்றம் | சின்ன சின்ன கரங்களின் சேமிப்பு முயற்சி | | K.அன்பரசன் | S.கந்தராஜ், N.நாகமலைச்செல்வி M.மருதுபாண்டி, K.அழகர் | |
| மலர்கள் சிறு குழந்தைகள் கலைக்குழு | நலிவுற்ற குழந்தைகள் நல்வாழ்வு நிதி மற்றும் நன்கொடைகளை வெளிப்படுத்துவதற்கான பங்கேற்பு நாள் | | A.S.கார்த்திக் பாரதி | R.பாண்டிச் ராஜா, P.மணிகண்டன் | R.கார்த்திக் |
| சிறு இளைஞர் மன்றம் | சமநிலை பூர்த்திக்குழு | | | O.மோகன் | M.பெத்துராஜா |
| சிறு இளைஞர் கலைக்குழு | சிறு பணி செய்யும் பகுதிகளைச் சார்ந்த இளைஞர்களை ஆக்கப் பணிக்கு திருப்பும் முயற்சி | | | P.முனியசாமி, S.முருகபாண்டி, O.மணிகண்டன் | K.கணேஷ்பாபு |